1974 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆம்.

திரு. என். டென்னிஸ் : இந்த ஏ.வி.எம். கால்வாயில் உள்ள பாலங்கள் மிகவும் பழுதடைந்திருக்கின்றன. சில பாலங்கள் மிகவும் அபாயகரமான நிலையில் இருக்கின்றன. மாவட்ட வளர்ச்சிக் குழுவின் கூட்டத்தில் இது பற்றி தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தப் பாலங்களை உடனடியாக பழுது பார்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளுமா? எப்பொழுது அவைகள் பழுதுபார்க்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது வரையில் அந்தக் கால்வாயை யார் பராமரிப்பது, யார் மராமத்து செய்வது என்பது இல்லாமல் இருந்தது. இப்பொழுதுதான் அதைப் பொதுப் பணித் துறை ஏற்றுக்கொள்ள முடிவு செய்யப்பட்டிருக்கிறது. நெடுஞ்சாலைத் துறையினிடம் சில தகவல்கள் கேட்கப்பட்டிருக்கின்றன. தகவல்கள் வந்தவுடன் வேலைகளை துவங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

Water-supply for ayacuts in Kanyakumari.

* 728 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government are aware of the withering away of standing crops at Kanyakumari district due to inadequate supply of water during September 1973; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) பேச்சிப்பாறை பெருஞ்சாணி நீர்த்தேக்கங்களில் இருந்த தண்ணீரைக் கொண்டும், மேல் கோதையாறு நீர்த்தேக்கத்திலிருந்து அதிகப்படியான தண்ணீர் பெற்றும், வாய்க்கால்களுக்கு இடையே முறைப்பாசனம் ஏற்படுத்தியும் கோதையாறு பட்டணம்கால் ஆயக்கட்டுப் பிரதேசத்தில் உள்ள விளைநிலங்களுக்குத் தேவையான தண்ணீர் வழங்கப்பட்டது. தண்ணீர் பற்றாக்குறை காரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் செப்டம்பர் 73-ல் வளரும் பயிர்கள் எதுவும் வாடவில்லை.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் "டெயில் என்ட்" நிலங்களில் செப்டம்பர் மாதத்தில் கூட வளரும் பயிர்கள் வாடியும் கரிந்தும் காணப்படுகின்றன. அந்த

முறையில் தற்போது கூட ஏறத்தாழ 10,000 ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதைப் போக்க அரசாங்கம் தண்ணீர் விநியோகத்தை ஒழுங்குபடுத்த ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இந்த பாதகம் ஏற்பட்டிருப்பதற்கு தண்ணீர் விநியோகம் காரணம் அல்ல. பருவ மழை பொய்த்ததுதான் அதற்குக் காரணம். பருவ மழை பொய்த்ததற்கு என்னால் எதுவும் செய்ய முடியாது.

ஐயன்குளம் ஏரியை ஆழப்படுத்தல்

* 729. வினா—புலவர் சி. பழனிச்சாமி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனிக்கருகில் உள்ள ஆயக்குடியைச் சேர்ந்த ஐயன் குளத்தை ஆழப்படுத்தி வாய்க்கால் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 1.20 இலட்சம். எதிர்பார்க்கப்படும் உணவு உற்பத்தி 87.75 டன்களாகும். ஒரு டன்னுக்கு ஆகும் செலவு ரூ. 1,368. இத்திட்டம் 1974–75-இல் ஒப்புதலுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள்.

* 730. வினா—திரு. கி. ஜெயராமன்: மாண்புமிகு உணவு–கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்தினை ஊக்குவிக்க (Consumer Co-operative Movement) அரசு தற்போது மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்திற்கு ஊக்கமளிக்கும் பொருட்டு, சிறு சிறப்பங்காடிகள், நுகர்வோர் தொழில்கள் ஆகியவற்றைத் தொடங்குதல், கிடங்குகள் கட்டுதல், பாரவண்டிகள் வாங்குதல், பங்கு மூலதனம், நிர்வாக உதவித்தொகை ஆகியவற்றை வழங்குதல் போன்ற பல்